# நாடாளுமன்ற மக்களவை பொதுத் தேர்தல் - 2014

## ஆரணி நாடாளுமன்றத் தொகுதி

**அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் மாண்புமிகு தமிழ் நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்று (15.4.2014), ஆரணி நாடாளுமன்றத் தொகுதிக்கு உட்பட்ட 'வடதண்டலம் கிராமம், செய்யார்–ஆரணி நெடுஞ்சாலை' என்ற இடத்தில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரப் பொதுக்கூட்டத்தில் பங்கேற்று கழக வேட்பாளர்களை ஆதரித்து ஆற்றிய எழுச்சிமிகு தேர்தல் பிரச்சார பொதுக்கூட்ட உரை**

"ஆரணி நாடாளுமன்றத் தொகுதியைச் சேர்ந்த, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாவட்டக் கழகச் செயலாளர்களே, தேர்தல் பணிக்குழு பொறுப்பாளர்களே, கழக நிர்வாகிகளே, தலைமைக் கழக நிர்வாகிகளே, கழகப் பொருளாளரும், அமைச்சருமான அன்புச் சகோதரர் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்களே, திருவண்ணாமலை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், அமைச்சருமான அன்புச் சகோதரர் திரு. முக்கூர் N. சுப்பிரமணியன் அவர்களே, விழுப்புரம் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளரும், அமைச்சருமான அன்புச் சகோதரர் திரு. ப. மோகன் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களே, நாடாளுமன்ற உறுப்பினர்களே, உள்ளாட்சி மற்றும் கூட்டுறவு அமைப்புகளின் பிரதிநிதிகளே, புரட்சி பாரதம் கட்சியின் தலைவர் திரு. பூவை ஜெகன்மூர்த்தி அவர்களே, படையாட்சியார் பேரவையின் மாநிலத் தலைவர் டாக்டர் ராமதாஸ் அவர்களே, இந்திய குடியரசு கட்சியின் மாநில பொதுச் செயலாளர் திரு. செங்குட்டுவன் அவர்களே, இந்திய உழவர் உழைப்பாளர் கட்சியின் தலைவர் திரு. வேட்டவலம் மணிகண்டன் அவர்களே, தமிழகம் மற்றும் புதுவை மாநில தனியார் சர்க்கரை ஆலை கரும்பு விவசாயிகள் சங்கக் கூட்டமைப்பின் செயலாளர் திரு. வெங்கடேசன் அவர்களே, அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி, தமிழக வாழ்வுரிமைக் கட்சி, இந்திய தேசிய லீக், இந்தியன் யூனியன் காயிதே மில்லத் லீக், அகில இந்திய தேசிய லீக், தமிழ் மாநில முஸ்லீம் லீக், உள்ளிட்ட தோழமைக் கட்சிகளின் தலைவர்களே, தொண்டர்களே, பொதுமக்களே, வணக்கத்திற்குரிய பெரியோர்களே, என்னை வாழ வைக்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே, இதய தெய்வம் புரட்சித் தலைவர் MGR–ன் ரத்தத்தின் ரத்தமான என் உயிரினும் மேலான எனதருமைக் கழக உடன்பிறப்புகளே, எனதருமை வாக்காளப் பெருமக்களே, உங்கள் அனைவருக்கும் எனது அன்பு கலந்த வணக்கத்தை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன்.

நடைபெற இருக்கின்ற மக்களவைத் தேர்தல் வெறும் ஆட்சி மாற்றத்திற்காக நடைபெறுகின்ற சாதாரணத் தேர்தல் அல்ல. இந்திய மக்களுக்கு விடுதலையைப் பெற்றுத் தருகின்ற தேர்தல்.

அண்டை நாடுகளின் அச்சுறுத்தல்களில் இருந்து இந்தியாவை காக்கும் தேர்தல், பொருளாதார சீரழிவிலிருந்து இந்தியாவை மீட்கும் தேர்தல், ஊழல் சாம்ராஜ்யத்தில் இருந்து இந்தியாவை விடுவிக்கின்ற தேர்தல், உங்களின் துன்பங்களை போக்குகின்ற தேர்தல், உங்களை துயரங்களிலில் இருந்து விடுவிக்கின்ற தேர்தல். காங்கிரஸ் தலைமையிலான மத்திய கூட்டணி ஆட்சியில் என்னென்ன பிரச்சனைகளுக்கு நீங்கள் ஆளாக்கப்பட்டு இருக்கிறீர்கள் என்பதை சொல்லி மாளாது. விலைவாசி உயர்வு, பணவீக்கம், மாதா மாதம் பெட்ரோல் டீசல் விலை உயர்வு, வேலை வாய்ப்பின்மை, தொழில் வளர்ச்சியின்மை, வேளாண் உற்பத்தியில் மந்த நிலை என மத்திய காங்கிரஸ் கூட்டணி ஆட்சியில் ஏற்படுத்தப்பட்ட பிரச்சினைகளை அடுக்கிக் கொண்டே போகலாம். இது போன்ற மோசமான அரசை நாம் பார்த்ததே இல்லை என்று சொல்லும் அளவுக்கு மத்திய காங்கிரஸ் கூட்டணி அரசு ஆட்சி நடத்தியது.

இப்படி எல்லாவிதத்திலும் சாமானிய மக்களுக்கு எதிரான மத்திய காங்கிரஸ் கூட்டணி அரசில் சில மாதங்களுக்கு முன்பு வரை அங்கம் வகித்து ஒட்டி உறவாடிய கட்சி தி.மு.க. என்பதை மறந்துவிடாதீர்கள். தமிழ் நாட்டிற்கே தலைகுனிவை ஏற்படுத்தும்

வகையில் 2 லட்சம் கோடி ரூபாய் அளவுக்கு 2ஜி ஸ்பெக்ட்ரம் இமாலய ஊழலை முன்னின்று நிகழ்த்திய கட்சி தி.மு.க. இப்படி காங்கிரசும், தி.மு.க–வும் சேர்ந்து சாமானிய, ஏழை, எளிய, நடுத்தர மக்களுக்கு எதிராக செயல்பட்டதன் காரணமாக இந்திய நாட்டின் பொருளாதாரமே ஸ்தம்பித்துவிட்டது. இப்படிப்பட்ட கொடுங்கோல் அரசிடமிருந்து இந்திய நாட்டை காப்பாற்றுவதற்கான தருணம் வந்துவிட்டது. தமிழ் நாட்டிற்கு தேவையானவற்றை மத்திய அரசிடம் கேட்டுப் பெறுகின்ற காலம் கனிந்துவிட்டது. இந்த வாய்ப்பின் மூலம் உங்கள் வாக்குரிமையை நீங்கள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஆதரவாக செலுத்த வேண்டும் என்று சொல்வதற்காகத் தான் இன்று உங்களையெல்லாம் நேரில் சந்திக்க இங்கே வந்திருக்கிறேன்.

2011–ஆம் ஆண்டு நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை எந்த அளவிற்கு வெற்றி பெற வைத்தீர்களோ, அதைவிட மகத்தான வெற்றியை வரும் நாடாளுமன்ற மக்களவை பொதுத் தேர்தலில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு நீங்கள் வழங்க வேண்டும் என்ற வேண்டுகோளினை உங்கள் முன் வைப்பதற்காகவே நான் இன்று இங்கே வந்திருக்கிறேன். எனது வேண்டுகோளினை நீங்கள் நிச்சயம் நிறைவேற்றுவீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு முழுமையாக உண்டு. செய்வீர்களா? நீங்கள் செய்வீர்களா? (செய்வோம் என பலத்த கரகோஷம்)

தமிழகத்திலே மாற்றம் தந்த மக்களுக்கு ஏற்றம் தந்த அரசு எனது தலைமையிலான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு. கடந்த 34 மாத கால ஆட்சியில் மத்திய அரசின் மாற்றாந்தாய் மனப்பான்மையையும் மீறி, திமுக–வின் சதித் திட்டங்களையும் மீறி தமிழக மக்களுக்கு என்னென்ன நலத் திட்டங்களை, வளர்ச்சித் திட்டங்களை, தொலைநோக்குத் திட்டங்களை என்னால் தர முடியுமோ, அத்தனையும் அளித்திருக்கிறேன்; அளித்துக் கொண்டும் வருகிறேன்.

விலையில்லா அரிசி வழங்கும் திட்டம், திருமண உதவித் தொகையுடன் கூடிய தாலிக்கு தங்கம் வழங்கும் திட்டம், விலையில்லா மிக்ஸி, கிரைண்டர் மற்றும் மின்விசிறி வழங்கும் திட்டம், ஏழை கிராமப்புற மக்களுக்கு கறவைப் பசுக்கள் மற்றும் ஆடுகள் வழங்கும் திட்டம், சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின் கீழ் வழங்கப்படும் ஓய்வூதியம் 1,000 ரூபாயாக உயர்வு, மேல்நிலை வகுப்பு பயிலும் மாணவ, மாணவியருக்கு விலையில்லா மிதிவண்டிகள், விலையில்லா மடிக் கணினிகள், கட்டணமில்லா கல்வி, மாணவ, மாணவியருக்கு கட்டணமில்லா பேருந்து வசதி, முதலமைச்சரின் விரிவாக்கப்பட்ட மருத்துவக் காப்பீட்டு திட்டம், முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம், முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் திட்டம், தானே புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஒரு லட்சம் காங்கிரீட் வீடுகள் கட்டித் தரும் திட்டம், நெசவாளர்களுக்கென 10,000 பசுமை வீடுகள் கட்டித் தரும் திட்டம் என எண்ணற்ற திட்டங்கள் எனது தலைமையிலான அரசால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

ஆரணி நாடாளுமன்ற தொகுதிக்கு உட்பட்ட பகுதிகளில் பல்வேறு வசதிகளை கடந்த 34 மாதங்களில் நாங்கள் நிறைவேற்றி கொடுத்து இருக்கிறோம். போளூர்–ஆரணி ரயில் நிலையங்களுக்கு இடையில், கடலூர்–சித்தூர் சாலையில் ஒரு சாலை மேம்பாலம் அமைக்க முதற்கட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

மயிலம்–பேரணி ரயில்வே நிலையங்களுக்கு இடையே 22 கோடியே 43 லட்சம் ரூபாய் செலவில் ஒரு சாலை மேம்பாலம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. விக்கிரவாண்டி–நெமூர் சாலையில், முண்டியம்பாக்கம்–விக்கிரவாண்டி ரயில்வே நிலையங்களுக்கு இடையே, 20 கோடியே 20 லட்சம் ரூபாய் செலவில் ஒரு சாலை மேம்பாலம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ரயில்வே கடவு எண் 126 மற்றும் 127–க்கு மாற்றாக 36 கோடியே 38 லட்சம் ரூபாய் செலவில் ஒரு சாலை மேம்பாலம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

போளூர் வட்டம் மற்றும் செங்கம் வட்டம் பகுதிகளில், 3 கோடியே 7 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில், செய்யாற்றின் குறுக்கே கீழ்மட்ட தடுப்பு சுவர் அமைக்கப்பட்டு உள்ளது. செய்யாறு வட்டம், கொருக்காத்தூர் கிராமத்தில் செய்யாற்றின் குறுக்கே 2 கோடியே

20 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில், கீழ்மட்ட நிலத்தடி தடுப்புச் சுவர் அமைக்கப்பட்டு உள்ளது.

ஆரணி தொகுதிக்குட்பட்ட திருநாவலூர் வட்டாரத்திலுள்ள சேந்தநாட்டில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. செய்யாறில் உள்ள அரிசி ஆலையை நவீனமயமாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது.

ஆரணி தொகுதி அனக்காவூர் ஒன்றியத்திற்கு உட்பட்ட சித்தாமூர் மற்றும் 27 குடியிருப்புகளில் 13,756 பேர் பயன் அடையும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் என்னால் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

செய்யாறு ஒன்றியத்திற்கு உட்பட்ட தென்பூண்டி பட்டு மற்றும் ஒன்பது குடியிருப்புகளில் வசிக்கும் 4,000 மக்கள் பயன் அடையும் வகையிலான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை நாங்கள் நிறைவேற்றிக் கொடுத்துள்ளோம்.

வந்தவாசி நகராட்சியில் வசிக்கும் 31,000 மக்கள் பயனடையும் வகையிலான தண்ணீர் விநியோக மேம்பாட்டுத் திட்டப் பணிகள் 11 கோடி ரூபாய் மதிப்பில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திருவத்திபுரம் நகராட்சிக்கு உட்பட்ட 38,000 மக்கள் பயன் பெறும் வகையில் 13 கோடியே 43 லட்சம் ரூபாய் செலவில் கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிக்கான ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டுள்ளன. ஆரணி நகராட்சிக்கு உட்பட்ட 64,000 மக்கள் பயன்பெறும் வகையில் 36 கோடியே 26 லட்சம் ரூபாய் செலவில் குடிநீர் அபிவிருத்தி திட்டப் பணிகளுக்கான ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டுள்ளன.

ஆரணி தொகுதி, போளூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட படவேடு மற்றும் 46 குடியிருப்புகளுக்கான குடிநீர் அபிவிருத்தி திட்டப் பணிகள் 3 கோடியே 3 லட்சம் ரூபாய் செலவில் முடிக்கப்பட்டு என்னால் துவக்கி வைக்கப்பட்டது.

இந்தத் தொகுதிக்கு உட்பட்ட மயிலம், மேல்மலையனூர், செஞ்சி, வல்லம் ஆகிய ஒன்றியங்களில் 14 கோடியே 20 லட்சம் ரூபாய் செலவில் 47 ஏரிகளை சீரமைக்கும் பணிகள் முடிக்கப்பட்டு உள்ளன. இந்த தொகுதிக்கு உட்பட்ட திருவக்கரை செங்கமேடு சாலை 45 லட்சம் ரூபாய் செலவில் அகலப்படுத்தப்பட்டு சுற்றுச்சுவர் அமைக்கப்பட்டு உள்ளது.

ஆரணி மக்களவைத் தொகுதியின் வளர்ச்சிக்காக, நலனுக்காக பல்வேறு பணிகளை நாங்கள் மேற்கொண்டு வருகிறோம்.

வாக்காளப் பெருமக்களே! மத்திய காங்கிரஸ் கூட்டணி அரசில் ஒன்பது ஆண்டு காலம் அங்கம் வகித்த கட்சி தி.மு.க. 2006 முதல் 2011 வரை மத்தியிலும், மாநிலத்திலும் ஆட்சி அதிகாரத்தில் இருந்த கட்சி தி.மு.க. ஆனால், தமிழகத்தின் மின் உற்பத்தியை அதிகரிக்க ஆக்கப்பூர்வமான நடவடிக்கையை தி.மு.க. எடுத்ததா ? இல்லையே ! மாறாக மின் மிகை மாநிலமாக இருந்த தமிழ்நாட்டை மின் குறை மாநிலமாக ஆக்கியது தி.மு.க. மின் உற்பத்தியை பெருக்க நடவடிக்கை எடுக்காமல், நீண்ட கால அடிப்படையில் மின் கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுக்காமல், பணம் பார்க்க வேண்டும்; கமிஷன் பெற வேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடு, குறுகிய கால அடிப்படையில் அதிக விலை கொடுத்து, மின்சாரத்தை வாங்குவதிலேயே குறியாக இருந்தது தி.மு.க. இதன் காரணமாக, மின்சார வாரியத்திற்கு 50,000 கோடி ரூபாய் அளவுக்கு கடன் ஏற்பட்டதோடு, ஒரு நாளைக்கு 10 மணி நேரம், 12 மணி நேரம் மின்வெட்டு ஏற்படும் அளவுக்கு தமிழ்நாடு இருளில் தள்ளப்பட்டது. தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு கடன் அளிக்கக் கூடாது என்று பாரத ரிசர்வ் வங்கி அனைத்து வங்கிகளுக்கும் உத்தரவிடும் வகையில், மின் நிலைமை மிகவும் மோசமாக இருந்தது. மின் துறையில் தி.மு.க. செய்த சாதனை இது தான்.

தி.மு.க. எப்பொழுதெல்லாம் ஆட்சிக்கு வருகிறதோ, அப்பொழுதெல்லாம் மின் பற்றாக்குறை ஏற்படுவது வழக்கம். இதற்குக் காரணம் தி.மு.க. ஆட்சிக் காலத்தில் மின் உற்பத்தித் திறனை அதிகரிக்க நடவடிக்கை எடுக்காதது தான். 1991 முதல் 1996 வரையிலான எனது முதல் ஆட்சிக் காலத்தில், கிட்டத்தட்ட 1,300 மெகாவாட் மின் நிறுவு திறன் கூடுதலாக சேர்க்கப்பட்டது. 2001 முதல் 2006 வரையிலான எனது இரண்டாவது ஆட்சிக் காலத்தில் 2,500 மெகாவாட் அளவுக்கு கூடுதல் மின் நிறுவு திறன் சேர்க்கப்பட்டது.

ஆனால், 1996 முதல் 2001 வரையிலான தி.மு.க. ஆட்சிக் காலத்தில் வெறும் 561 மெகாவாட் மின் நிறுவு திறனும், 2006 முதல் 2011 வரையிலான மைனாரிட்டி தி.மு.க. ஆட்சிக் காலத்தில் வெறும் 206 மெகாவாட் மின் நிறுவு திறனும் தான் கூடுதலாக சேர்க்கப்பட்டது.

2011–ஆம் ஆண்டு நான் 3–ஆவது முறையாக ஆட்சிப் பொறுப்பை ஏற்பதற்கு முன்பு மின்சாரத் தேவை 11,000 மெகாவாட்டாக இருந்தது. ஆனால், மின் உற்பத்தி வெறும் 8,000 மெகாவாட்டாக இருந்தது. அதாவது, மின் தேவைக்கும், மின் உற்பத்திக்குமான இடைவெளி 3,000 மெகாவாட்டாக இருந்தது. வாக்காளப் பெருமக்களே! இந்த அளவு மோசமான மின் நிலைமையை சீர் செய்ய போதுமான கால அவகாசம் தேவை என்பதை நீங்கள் நினைவில் கொள்ள வேண்டும்.

தமிழ்நாடு மின்சார வாரியத்தை அழிவிலிருந்து மீட்டெடுக்கவும், புதிதாக மின் உற்பத்தியை பெருக்கிடவும், மின் வெட்டை நீக்கிடவும், போர்க்கால அடிப்படையில் எனது அரசால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. மின் பற்றாக்குறையில் இருந்து விடுபட வேண்டுமென்றால், ஒன்று தமிழ் நாட்டிலேயே கூடுதல் மின் உற்பத்தி செய்யப்பட வேண்டும் அல்லது வெளி மாநிலங்களில் இருந்து மின்சாரம் வாங்கப்பட வேண்டும். புதிய மின் நிலையங்களில் பணிகள் நிறைவடைய உரிய கால அவகாசம் தேவை. எனவே, வெளி மாநிலங்களில் இருந்து மின் வழித் தடங்கள் வழியாகத் தான் மின்சாரத்தை கொண்டு வர முடியும். ஆனால், தி.மு.க–வின் தூண்டுதலின் பேரில், மத்திய காங்கிரஸ் கூட்டணி அரசு அவ்வாறு மின்சாரத்தை கொண்டு வருவதை அனுமதிக்கவில்லை. டெல்லி மாநில அரசு தனக்கு வேண்டாம் என்று திருப்பிக் கொடுத்த 1,700 மெகாவாட் மின்சாரத்தைக் கூட தி.மு.க. அங்கம் வகித்த மத்திய காங்கிரஸ் கூட்டணி அரசு நமக்குத் தர தமிழகத்திற்குத் தர மறுத்துவிட்டது. இருப்பினும் எனது பகீரத முயற்சியின் காரணமாக, மேட்டூர் அனல் மின் திட்ட மூன்றாம் நிலை அலகிலிருந்து 600 மெகாவாட்; வல்லூர் கூட்டு மின் திட்டத்தின் இரு அலகுகளிலிருந்து 700 மெகாவாட்; வட சென்னை அனல் மின் திட்டத்தின் இரு அலகுகளிலிருந்து 1,200 மெகாவாட் என; கிட்டத்தட்ட 2,500 மெகாவாட் அளவுக்குக் கூடுதல் மின் நிறுவு திறன் தற்போது உருவாக்கப்பட்டு உள்ளது. இது தவிர, நடுத்தர கால அடிப்படையில் 500 மெகாவாட் மின்சாரம் கொள்முதல் செய்யப்படுகிறது. கேரள மாநிலத்தில் இருந்து 450 மெகாவாட் மின்சாரம் கொள்முதல் செய்யப்படுகிறது. மாநிலத்தில் உள்ள தனியாருக்கு சொந்தமான சிறு மின் நிலையங்களில் இருந்து கூடுதலாக 350 மெகாவாட் மின்சாரம் பெறப்படுகிறது. கூடங்குளம் அணுமின் நிலையத்தின் முதல் அலகிலிருந்து 370 மெகாவாட் மின்சாரம் தமிழகத்திற்கு தற்போது கிடைத்து வருகிறது. ஆக மொத்தம், இன்றைய தேதியில் 2010–2011 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், எனது தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பிறகு கூடுதலாக 4,170 மெகாவாட் மின்சாரம் நமக்கு கிடைக்கிறது. ஒட்டுமொத்தத்தில் பார்த்தால் கிட்டத்தட்ட 12,170 மெகாவாட் மின்சாரம் நமக்கு கிடைத்துக் கொண்டிருக்கிறது. அதாவது, 12,170 மெகாவாட்டில், 4,170 மெகாவாட் அதாவது, 34 சதவீத மின்சாரம் எனது ஆட்சியில் மூன்று ஆண்டுகளுக்குள்ளாகவே பெறப்பட்டுள்ளது என்பது எவ்வளவு பெரிய சாதனை என்பதை ஊடக நண்பர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். வாக்காளப் பெருமக்களும் எண்ணிப் பார்க்க வேண்டும். முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் சராசரியாக தினசரி 208 மில்லியன் யூனிட்டுகள் என்றிருந்த மின் விநியோகம், தற்போது 270 மில்லியன் யூனிட்டுகளாக உயர்ந்துள்ளது. கடந்த மூன்று ஆண்டுகளில் மட்டும் 30 லட்சம் புதிய மின் இணைப்புகள் கொடுக்கப்பட்டு உள்ளன. நம்முடைய தற்போதைய தேவை 12,800 மெகாவாட் ஆகும்.

NLC அனல் மின் நிலைய விரிவாக்கத்திலிருந்து இந்த மாதம் 250 மெகாவாட் மின்சாரமும், ஜூலை மாதத்தில் 250 மெகாவாட் மின்சாரமும் உற்பத்தி செய்யப்பட இருக்கிறது. இதிலிருந்து, 230 மெகாவாட் மின்சாரம் நமக்கு ஜூலை மாதத்திலிருந்து கிடைக்கும். தூத்துக்குடியில் உருவாக்கப்பட்டு வரும் NLC மற்றும் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் கூட்டு முயற்சி திட்டத்தின் முதல் அலகிலிருந்து 500 மெகாவாட் மின்சாரம் ஜூன் மாதத்தில் இருந்தும், இரண்டாவது அலகிலிருந்து 500 மெகாவாட் மின்சாரம் செப்டம்பர் மாதத்தில் இருந்தும் உற்பத்தி ஆக இருக்கிறது. இந்தத் திட்டத்திலிருந்து தமிழ்நாட்டிற்கு 387 மெகாவாட் மின்சாரம் கிடைக்கும்.

வல்லூர் மூன்றாவது அலகிலிருந்து, இந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதல் 500 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட இருக்கிறது. இதிலிருந்து, தமிழ்நாட்டிற்கு 350 மெகாவாட் மின்சாரம் கிடைக்கும். இது தவிர 3,330 மெகாவாட் அளவு மின்சாரத்தை 15 ஆண்டுகளுக்கு பெறத் தக்க வகையில், நீண்டகால அடிப்படையில் கொள்முதல் ஒப்பந்தங்கள் போடப்பட்டுள்ளன. இதில், 74 மெகாவாட் தமிழகத்தில் நிறுவப்பட்டுள்ள ஒரு தனியார் மின் நிலையத்திலிருந்து 1–1–2014 முதல் பெறப்பட்டு வருகிறது. மேலும், இந்த ஆண்டு ஜுன் மாதத்திலிருந்து 208 மெகாவாட் மின்சாரமும், ஆகஸ்ட் மாதத்திலிருந்து மேலும் 1,000 மெகாவாட் மின்சாரமும் தமிழ்நாட்டிற்கு கிடைக்க உள்ளது. தற்போது, பரிசோதனையில் உள்ள சோலாப்பூர் – ரெய்ச்சூர் மின் வழித் தடம் வணிக உபயோகத்திற்கு விரைவில் கொண்டு வரப்படும் போது, இந்த 1,208 மெகாவாட் மின்சாரம் நமக்குக் கிடைக்கும். தூத்துக்குடியில் உள்ள தனியார் மின் நிறுவனத்திடம் இருந்து 558 மெகாவாட் மின்சாரம் இந்த ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் கொள்முதல் செய்யப்பட இருக்கிறது. இது தவிர, கடலூர் மாவட்டத்தில் உருவாக்கப்பட்டு வரும் தனியார் மின் திட்டத்தில் இருந்து 540 மெகாவாட் மின்சாரம் 2015–2016 ஆம் ஆண்டு தொடக்கத்தில் இருந்து நமக்கு கிடைக்க இருக்கிறது.

மீதமுள்ள 950 மெகாவாட் மின்சாரம் கூடுதல் மின் வழித் தடங்கள் நிறுவப்படுவது முழுமை பெற்றவுடன் பெறப்படும். இது தவிர, கூடங்குளம் அணுமின் நிலையத்தின் இரண்டாவது அலகிலிருந்து 462 மெகாவாட் மின்சாரம் இந்த ஆண்டு இறுதிக்குள் தமிழ்நாட்டிற்கு கிடைக்கும்.

ஆக மொத்தம், இந்த ஆண்டு இறுதிக்குள் கூடுதலாக 3,195 மெகாவாட் மின்சாரம் தமிழ்நாட்டிற்கு கிடைக்கும். அப்போது, தமிழ்நாட்டின் மின் உற்பத்தித் திறன் 14,745 மெகாவாட் ஆக இருக்கும். அதே சமயத்தில், மின் தேவை என்பது 14,505 மெகாவாட் என்ற அளவுக்கு தான் இருக்கும். நானே நேரடியாக மின் நிலைமை குறித்து ஆய்வு செய்து, அதன் அடிப்படையில் நடவடிக்கைகளை எடுத்து வருவதன் காரணமாகத்தான் இந்த ஆண்டு இறுதிக்குள் இந்த அளவு மின்சாரத்தை நம்மால் பெற முடிகிறது.

இந்தத் தருணத்தில் தற்போது என்ன நிலைமை என்பது பற்றியும், நான் உங்களுக்கு விளக்கி ஆக வேண்டும். கடந்த ஆண்டு 2013–ல் ஜுலை மாதம் முதல் அக்டோபர் 15–ஆம் தேதி வரை மின்வெட்டு இல்லாத சூழ்நிலை தமிழகத்தில் நிலவியது. இதனை, நான் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் குளிர்கால கூட்டத் தொடரின் போது பெருமையாக கூறினேன். இவ்வாறு நான் சொன்னவுடன், தமிழ்நாடு மின்சார வாரியத்திடம் ஒப்படைக்கப்படாத புதிய கூட்டு மின் திட்டங்கள் உட்பட மத்திய மின் உற்பத்தி நிலையங்கள் மற்றும் பொதுத் துறை நிறுவனங்கள் மூலம் பெறப்பட்டு வந்த மின் உற்பத்தி சுமார் 2,500 மெகாவாட் அளவுக்கு சொல்லி வைத்தாற் போல் திடீர் என ஒரே சமயத்தில் குறைந்தது. இதன் காரணமாக, மீண்டும் கடுமையான மின் பற்றாக்குறை ஏற்பட்டது. இது ஏதோ சதிச் செயல், வேண்டுமென்றே மின் உற்பத்தி நிலையங்களை பழுதடையச் செய்து இருக்கிறார்கள் என்று நான் தெரிவித்தேன். அது பற்றி பாரதப் பிரதமருக்கும் கடிதம் எழுதினேன். அதை ஏற்றுக் கொள்வதைப் போலவே பாரதப் பிரதமரும் இது யதேச்சையாக நடந்தது என்று தெரிவித்து கடிதம் எழுதினார். அப்போது, ஏற்காடு சட்டமன்றத் தொகுதி இடைத் தேர்தல் நடைபெற்றது. பின்னர் இந்தப் பிரச்சனை சரி செய்யப்பட்டுவிட்டது. மின்வெட்டு இல்லாத சூழ்நிலை மீண்டும் நிலவியது.

அதன் பின்னர், மக்களவை பொதுத் தேர்தல் அறிவிக்கப்பட்டு நான் தீவிரப் பிரச்சாரம் மேற்கொண்டுள்ள சூழ்நிலையில், தேர்தலுக்கு சில நாட்களே உள்ள இந்தக் காலகட்டத்தில் தற்போது மீண்டும் இந்த மின்வெட்டு ஏற்பட்டுள்ளது.

இதற்குக் காரணம் என்னவென்று பார்த்தால் 600 மெகாவாட் திறன் கொண்ட மேட்டூர் அனல் மின் நிலையத்தின் புதிய அலகு, மீண்டும் Hydrogen வாயு கசிவின் காரணமாக 6.3.2014 முதல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. 600 மெகாவாட் திறன் கொண்ட வட சென்னை அனல் மின் நிலையத்தின் புதிய அலகு 5.4.2014 முதல் பழுதடைந்துள்ளது. கூடங்குளம் அணுமின் நிலையத்தில் இருந்து தமிழ்நாட்டிற்கு கிடைத்து வந்த 370 மெகாவாட் மின்சார உற்பத்தி பழுதின் காரணமாக தடைபட்டு, தற்போது மீண்டும் சரி செய்யப்பட்டு மின்சாரம்

பெறப்படுகிறது. தற்போது, மொத்தத்தில் 1,200 மெகாவாட் அளவுக்கு மின்சார உற்பத்தி குறைந்துள்ளது. தேர்தல் சமயத்தில் இது போன்று மின் வெட்டு ஏற்பட்டு இருப்பதும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசின் மீது எந்தக் குறையையும் சுட்டிக் காட்ட முடியாத சூழ்நிலையில் இந்த மின்வெட்டுப் பிரச்சனையை எதிர்க்கட்சிகள், குறிப்பாக தி.மு.க. சுட்டிக்காட்டி பிரச்சாரம் செய்து வருவதும், இதே போன்ற பிரச்சனை தேர்தல் காலங்களில் ஏற்படுவதும், தி.மு.க. மற்றும் காங்கிரஸ் கட்சிகளின் மீது மக்கள் மனதில் பெருத்த சந்தேகத்தை ஏற்படுத்தி உள்ளது.

இந்த புதிய மின் அலகுகள் பழுது அடைந்ததில் ஏதாவது சதித் செயல் நடைபெற்றுள்ளதா என்பது குறித்து ஆய்வு செய்து, இதற்கு காரணமானவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

வட சென்னை அனல் மின் நிலையத்தில் ஏற்பட்ட பாதிப்பு சரி செய்யப்பட்டு மின் உற்பத்தி மீண்டும் துவங்கப்பட்டுள்ளது. மேட்டூர் மின் அலகில் ஏற்பட்டுள்ள பாதிப்பினை சரி செய்ய சீனாவிலிருந்து வல்லுநர்கள் வரவழைக்கப்பட்டு, போர்க்கால அடிப்படையில் சீரமைப்பு பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்த மின் நிலையம் மீண்டும் துவங்கும் போது மின் வெட்டு வெகுவாக குறைக்கப்பட்டுவிடும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இது மட்டுமல்லாமல் எதிர்கால மின் தேவையைக் கருத்தில் கொண்டு, 3,300 மெகாவாட் திறன் கொண்ட அனல் மின் திட்டங்களுக்கு சர்வதேச ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டு, பெறப்பட்டுள்ளன. இதில், 660 மெகாவாட் திறன் கொண்ட எண்ணூர் விரிவாக்க மிக உய்ய அனல் மின் திட்டத்திற்கான பணி ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. மற்றவை வெகு விரைவில் இறுதி செய்யப்படும். 2,000 மெகாவாட் திறன் கொண்ட சில்லஹல்லா நீரேற்று புனல் மின் திட்டத்திற்கான தொடக்க ஆய்வுப் பணிகள் முடிவு பெற்றுள்ளன. விரைவில் முதற் கட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பதற்கான பணிகள் எடுத்துக் கொள்ளப்படும்.

மின்சாரப் பிரச்சனையில் மக்களுக்கு துன்பங்களை விளைவித்து, அரசியல் ஆதாயம் தேட நினைக்கும் தி.மு.க. மற்றும் காங்கிரஸ் கட்சிகளுக்கு இந்தத் தேர்தலில் நீங்கள் சவுக்கடி கொடுத்து விரட்ட வேண்டும் என்று உங்களையெல்லாம் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். செய்வீர்களா ? நீங்கள் செய்வீர்களா ? (செய்வோம் என பலத்த கரகோஷம்)

மத்தியிலும், மாநிலத்திலும் ஆட்சியில் இருந்த போது மின் உற்பத்தியை பெருக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுக்காதவர் திரு. கருணாநிதி. எனது முந்தைய ஆட்சிக் காலத்தில் பைகாரா புனல் மின் திட்டத்திற்கு மத்திய அரசு மூலம் தடை போட்டவர் திரு. கருணாநிதி. சில்லரை வணிகத்தில் அந்நிய முதலீடு என்ற கொள்கைக்கு ஆதரவு தெரிவித்தவர் திரு. கருணாநிதி. காவேரி நதிநீர்ப் பிரச்சனையில் ஒரு துரும்பைக் கூட கிள்ளிப் போடாதவர் திரு. கருணாநிதி.

இப்படி தமிழகத்திற்கு துரோகத்தை மட்டுமே இழைத்த திரு. கருணாநிதி, அண்மையில் திருவாரூரில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் காவேரி பிரச்சனை குறித்து வாதம் செய்ய சட்டமன்றத்திலே நேரம் ஒதுக்கலாம். ஒதுக்கி, அதிலே விவாதித்து யார் தவறு செய்தார்கள் ? யார் நியாயமாக நடந்து கொண்டார்கள் ? யார் நம்முடைய உரிமைகளைப் பெற்றுத் தர முயற்சித்தார்கள் ? என்ற உண்மையை நாட்டு மக்களுக்கு விளக்கட்டும் என்று கூறி இருக்கிறார்.

காவேரி நதிநீர்ப் பிரச்சனையில் பல துரோகங்களை செய்து இருக்கிறார் திரு. கருணாநிதி. கர்நாடகம் அணைகளை கட்டிக் கொள்ள அனுமதித்தது, உச்ச நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கை தன்னிச்சையாக வாபஸ் வாங்கியது, காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணையை மத்திய அரசிதழில் வெளியிட நடவடிக்கை எடுக்காதது என அடுக்கிக் கொண்டே போகலாம்.

திரு. கருணாநிதியின் சவாலை நான் ஏற்றுக் கொள்கிறேன். தேர்தல் முடிந்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை கூட்டப்பட்ட உடன், காவேரி நதிநீர்ப் பிரச்சனை குறித்து விவாதிக்க நான் தயாராக இருக்கிறேன். திரு. கருணாநிதியின் துரோகங்களை பட்டியலிட நான் தயாராக இருக்கிறேன். என் கட்சியின் சார்பில் நான் தான் பேசுவேன். இதே போல்

திரு. கருணாநிதியும் வந்து சட்டமன்ற விவாதத்தில் கலந்து கொள்ளத் தயாரா? தி.மு.க–வின் சார்பில் திரு. துரைமுருகனோ அல்லது வேறு பிரதிநிதிகளோ விவாதிப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது. இதனைத் திரு. கருணாநிதி ஏற்றுக்கொள்ளத் தயாரா? சட்டமன்றத்திற்கு வரத் தயாரா? என்னை நேருக்கு நேர் சந்தித்து விவாதிக்கத் தயாரா? இதனை திரு. கருணாநிதி ஏற்றுக் கொள்கிறாரா, இல்லையா? என்பது குறித்த அவருடைய முடிவை அவர் அறிவிக்க வேண்டும். இல்லையெனில் துரோகங்கள் இழைக்கப்பட்டது உண்மை தான் என்று திரு. கருணாநிதியே ஒப்புக்கொள்கிறார் என்று தான் அர்த்தம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் BJP–யின் ‘B’ டீம் என்றும், BJP–யை எதிர்த்து ஏன் பேசவில்லை என்றும், எதிர்க்கட்சிகள் விமர்சனம் செய்து வருகின்றன. எங்களைப் பொறுத்த வரையில் நாங்கள் யாருக்கும் ‘B’ டீம் இல்லை என்பதையும், எங்கள் அணி தான் முதன்மையான அணி என்பதையும் நான் ஏற்கெனவே கூறி இருக்கிறேன்.

காங்கிரஸ் மற்றும் BJP அல்லாத ஆட்சி மத்தியிலே அமைய வேண்டும் என்பதே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் லட்சியம் ஆகும். இதை நான் 2012–ஆம் ஆண்டு நடைபெற்ற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுக் குழுவிலேயே அறிவித்தேன். இந்த லட்சியம் நிறைவேற வேண்டுமென்றால் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் உள்ள 40 மக்களவை தொகுதிகளிலும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெற்றே தீரவேண்டும். எனவே தான், இந்தத் தேர்தலில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் 40 மக்களவைத் தொகுதிகளிலும் போட்டியிடுகிறது.

இந்த 40 தொகுதிகளிலும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெறுவதற்கான தேர்தல் பிரச்சார கூட்டங்களில், மத்திய காங்கிரஸ் கூட்டணி அரசையும், அந்த மத்திய காங்கிரஸ் கூட்டணி ஆட்சியிலே ஒன்பது ஆண்டு காலம் அங்கம் வகித்து தமிழகத்திற்கும், தமிழக மக்களுக்கும் இழைக்கப்பட்ட துரோகங்களுக்கு உறுதுணையாக இருந்த தி.மு.க–வையும் தான் எங்களால் கடுமையாக விமர்சிக்க முடியும். ஏனெனில், இந்தத் தேர்தலே காங்கிரஸ் கட்சியின் மோசமான ஆட்சிக்கு எதிராக நடைபெறுகின்ற தேர்தல்.

தமிழக மக்களின் வாக்குகளைப் பெற்று, மத்தியிலே ஆட்சி அதிகாரத்தில் அமர்ந்து, கடந்த நாடாளுமன்றத் தேர்தல் அறிக்கையில் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகள் எதையும் நிறைவேற்றாமல், தமிழக மக்களை வஞ்சித்த கட்சி தி.மு.க. எனவே, தி.மு.க–வின் பொய் முகமூடியை கிழித்தெறிய வேண்டும் என்பதற்காகவே தி.மு.க. தேர்தல் அறிக்கையை நான் விமர்சித்து வருகிறேன்.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், மகத்தான வெற்றி பெறும் போது என்னென்ன செயல் திட்டங்களை செயல்படுத்துவோம் என்பதைத் தான் நான் விளக்கமாக எடுத்துரைத்து வருகிறேன். தி.மு.க. மற்றும் இதரக் கட்சிகள் தாங்கள் என்ன செய்துள்ளோம், இனி என்னென்ன செய்யப் போகிறோம் என்பதை எடுத்துச் சொல்வதில்லை. அவர்கள் சொல்வது இரண்டே இரண்டு விஷயங்கள் தான். ஒன்று, ஜெயலலிதா பாரதப் பிரதமர் ஆகிவிடக் கூடாது. மற்றொன்று, தாங்கள் சுட்டிக் காட்டுபவர் தான் பாரதப் பிரதமர் ஆக வேண்டும்.

BJP–யை பொறுத்த வரை அந்தக் கட்சியின் தேர்தல் அறிக்கையில் காவேரி நதிநீர்ப் பிரச்சனை குறித்தோ, முல்லைப் பெரியாறு அணை பிரச்சனை குறித்தோ, இலங்கைத் தமிழர் பிரச்சனை குறித்தோ, தமிழக மீனவர்கள் பிரச்சனை குறித்தோ, கச்சத்தீவு பிரச்சனை குறித்தோ எதுவுமே குறிப்பிடப்படவில்லை. எனவே, தமிழகத்தின் முக்கியமான பிரச்சினைகளில் BJP–க்கு அக்கறை இல்லை என்று தான் நாம் பொருள் கொள்ள வேண்டும்.

1996–ஆம் ஆண்டு முதல் மத்தியிலே கூட்டணி ஆட்சி தான் நடைபெற்று வருகிறது. காங்கிரஸ் மற்றும் BJP தலைமையிலான கூட்டணி ஆட்சிகள் மத்தியில் ஆட்சி புரிந்துள்ளன. ஆனால், தற்போதைய நாடாளுமன்ற தேர்தல் முற்றிலும் மாறுபட்ட தேர்தல் முடிவுகளை அளிக்கக் கூடியது.

தற்போதுள்ள சூழ்நிலையில் மாநிலக் கட்சிகள் ஒருங்கிணைந்து மத்தியில் ஆட்சி அமைக்கும் நிலை தான் உள்ளது. அதுதான் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் லட்சியம். மத்தியிலே காங்கிரஸ் அல்லாத ஆட்சி; BJP அல்லாத ஆட்சி அமைய வேண்டும் என்பது தான் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் லட்சியம். இது போன்ற ஆட்சியில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் முக்கிய பங்கு வகிக்க வேண்டுமென்றால், 40 இடங்களிலும் நாம் வெற்றி பெற்றே தீர வேண்டும். அது போன்றதொரு சூழ்நிலையை நீங்கள் உருவாக்கிக் கொடுக்க வேண்டும். அதை உங்களால் தான் சாதிக்க முடியும். செய்வீர்களா ? நீங்கள் செய்வீர்களா ? (செய்வோம் என பலத்த கரகோஷம்) அப்பொழுது தான், தமிழ்நாட்டின் குரல் மத்தியில் ஓங்கி ஒலிக்கும். தமிழ்நாட்டின் உரிமைகள் நிலைநாட்டப்படும். தமிழினம் பாதுகாக்கப்படும். சிறுபான்மையினர் நலன்கள் உறுதி செய்யப்படும். எனவே, வருகின்ற நாடாளுமன்ற மக்களவைத் தேர்தலில் உங்களுடைய வாக்குகளை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு சிந்தாமல், சிதறாமல் நீங்கள் அளிக்க வேண்டும். தமிழர்கள் நலன்களுக்கு எதிராக செயல்படும் காங்கிரஸ், BJP மற்றும் அதன் கூட்டணிக் கட்சிகள், தி.மு.க. மற்றும் அதன் கூட்டணி கட்சிகள் ஆகியவற்றின் வேட்பாளர்களை அனைத்துத் தொகுதிகளிலும் நீங்கள் படுதோல்வி அடையச் செய்ய வேண்டும் என்று உங்களையெல்லாம் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். செய்வீர்களா ? நீங்கள் செய்வீர்களா ? (செய்வோம் என பலத்த கரகோஷம்)

வாக்களப் பெருமக்களே மத்திய அரசின் கொள்கைகளை தீர்மானிக்கும் வலிமையை நீங்கள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வழங்கினால், இப்போது நிகழ்த்தி வரும் சாதனைகளை விட மிக அதிகமான சாதனைகளை நாங்கள் நிகழ்த்திக் காட்டுவோம்.

எனக்கு எல்லாமே நீங்கள் தான். உங்களால் தான் நான். உங்களுக்காகவே நான். எனக்கு தன்னலம் கிடையாது. எல்லாமே உங்கள் நலன் தான். தமிழ்நாட்டின் நலன் தான். தமிழக மக்களின் நலன் தான். தமிழக மக்கள் தான் என் மக்கள்.

எனவே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அங்கம் வகிக்கும் மத்திய ஆட்சி அமைய நீங்கள் எல்லாம் ‘‘இரட்டை இலை’’ சின்னத்திற்கு வாக்களிக்க வேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை அனைத்துத் தொகுதிகளிலும் வெற்றி பெறச் செய்ய வேண்டும் என்று உங்களை எல்லாம் அன்புடன் வேண்டி விரும்பி கேட்டுக் கொள்கிறேன்.

வருகின்ற மக்களவைத் தேர்தல் வெறும் ஆட்சி மாற்றத்திற்கான தேர்தல் அல்ல. இந்தியாவின் தலையெழுத்தை, உங்களின் தலைவிதியை மாற்றி அமைக்கப் போகின்ற தேர்தல். மத்திய காங்கிரஸ் கூட்டணி ஆட்சியில் அனைத்துத் துறைகளிலும் ஊழல் கொடிகட்டி பறக்கிறது. 2ஜி ஸ்பெக்ட்ரம் இமாலய ஊழல், ஹெலிகாப்டர் ஊழல், நிலக்கரி ஊழல், காமன்வெல்த் விளையாட்டை நடத்தியதில் ஊழல், விமான என்ஜின் வாங்கியதில் ஊழல் என ஊழல் பட்டியல் நீண்டு கொண்டே போகிறது. இதில், 2ஜி ஸ்பெக்ட்ரம் இமாலய ஊழலை முன்னின்று நடத்திய கட்சி தி.மு.க. என்பதை மறந்துவிடாதீர்கள்.

காங்கிரஸ் ஆட்சியில் நடைபெற்ற ஊழல்கள் மூலம் மட்டும் பல லட்சம் கோடி ரூபாய் அறவிற்கு இந்திய அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது என்பதை நீங்கள் நினைவில் கொள்ள வேண்டும். இப்படிப்பட்ட மக்கள் விரோத ஊழல் காங்கிரஸ் அரசை ஆட்சியிலிருந்து தூக்கி எறிவதை குறிக்கோளாகக் கொண்டு, வருகின்ற தேர்தலில் நீங்கள் உங்கள் ஜனநாயகக் கடமையை ஆற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அனைத்து தொகுதிகளிலும் காங்கிரஸ் கட்சியை நீங்கள் டெபாசிட் இழக்கச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். செய்வீர்களா? நீங்கள் செய்வீர்களா? **(செய்வோம் என பலத்த கரகோஷம்)**

கிட்டத்தட்ட 17 ஆண்டு காலம் மத்திய அமைச்சரவையில் அங்கம் வகித்த தி.மு.க. தமிழ் நாட்டிற்கு எதையாவது செய்ததா? இல்லை. 'மக்கள் நலம்' 'மக்கள் நலம்' என்று சொல்லி உங்கள் வாக்குகளைப் பெற்றார் திரு. கருணாநிதி. ஆட்சியில் அமர்ந்ததும் உங்கள் நலத்தை மறந்துவிட்டார். இப்படிப்பட்ட திமுக இந்தத் தேர்தலில் படுதோல்வி அடைய வேண்டும். இப்படிப்பட்ட கட்சிக்கு, திமுக–விற்கு இந்தத் தேர்தலில் நீங்கள் சம்மட்டி அடி கொடுக்க வேண்டும்; கொடுத்து விரட்ட வேண்டும் என்று உங்களையெல்லாம் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். செய்வீர்களா? நீங்கள் செய்வீர்களா? **(செய்வோம் என பலத்த கரகோஷம்)**

தமிழகம் இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக விளங்க வேண்டும் என்றால், தமிழகத்திற்கு தேவையானவற்றை பெற வேண்டும் என்றால், அதற்கு ஒரே வழி மத்தியிலே ஆட்சி மாற்றம். அந்த ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தக் கூடிய வலிமையை நீங்கள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வழங்க வேண்டும்; எனது கரங்களை வலுப்படுத்த வேண்டும் என்று உங்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். செய்வீர்களா? நீங்கள் செய்வீர்களா? **(செய்வோம் என பலத்த கரகோஷம்)**

உங்களின் ஆதரவோடு உங்கள் ஆட்சி மத்தியிலே அமையப் பெறும் போது,

- இந்திய நாட்டை வளர்ச்சிப் பாதையில் அழைத்துச் செல்லும் வகையில் ஏற்றுமதியை ஊக்குவிக்கவும், இறக்குமதியை தேவைக்கேற்ப செய்யவும்;
- விலைவாசி உயர்வை கட்டுக்குள் கொண்டு வரவும்;
- காவேரி, முல்லைப் பெரியாறு போன்ற நதிநீர்ப் பிரச்சனைகளில் தமிழகத்தின் உரிமையை நிலைநாட்டவும்;
- தமிழக மீனவர்கள் பிரச்சனைக்கு முற்றுப்புள்ளி வைக்கவும்;
- இலங்கை போரின் போது இனப் படுகொலை செய்தவர்களை ஐக்கிய நாடுகள் சபை மூலம் சட்டத்தின் முன் நிறுத்தி, தண்டனை பெற்றுத் தருவதற்கான தீர்மானத்தை இந்தியாவே முன்மொழியவும்;
- வல்லரசு நாடுகளுக்கு இணையாக இந்திய ராணுவத்தை, தரைப்படையை, கப்பற் படையை, விமானப் படையை நவீனமயம் ஆக்கவும்;
- தமிழ் மொழியை ஆட்சி மொழியாக்கவும், சென்னை உயர் நீதிமன்றத்தின் வழக்காடு மொழியாக தமிழை ஆக்கவும்;
- சில்லரை வர்த்தகத்தில் அந்நிய முதலீடு அறவே ஒழியவும்;
- வெளிநாடுகளில் உள்ள கருப்புப் பணத்தை மீட்கவும்;
- 2ஜி ஸ்பெக்ட்ரம் இமாலய ஊழல், ஹெலிகாப்டர் ஊழல், நிலக்கரி ஊழல் போன்ற காங்கிரஸ் கட்சியின், மத்திய கூட்டணி ஆட்சியில் நிகழ்த்தப்பட்ட ஊழல்களுக்கு காரணமானவர்களுக்கு நீதிமன்றம் மூலம் தண்டனை பெற்றுத் தரவும், இந்த ஊழல்கள் மூலம் மத்திய அரசுக்கு ஏற்பட்ட வருவாய் இழப்பை ஈடு கட்டவும்;
- பெட்ரோல், டீசல் ஆகியவற்றின் விலை நிர்ணயக் கொள்கையை மாற்றவும், பெட்ரோலியப் பொருட்களின் விலை ஓர் ஆண்டு முழுவதும் நிலையாக இருக்கவும்;
- தனி நபருக்கான வருமான வரி உச்ச வரம்பினை 5 லட்சம் ரூபாயாக உயர்த்தவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்திய நாடு சுதந்திரம் பெறுவதற்கு முன்பு வெள்ளையர்கள் விரட்டப்பட வேண்டும் என்ற மனநிலை மக்கள் மனங்களில் நிலவியது. தற்போது, இந்தியாவை வேட்டைக் காடாக்கி, கொள்ளையடித்து, சின்னாபின்னமாக்கி, நாட்டையே சூறையாடிய காங்கிரஸ் தலைமையிலான மத்திய அரசை தூக்கி எறிய வேண்டும். இனி எதிர்காலத்திலும் மத்தியில் காங்கிரஸ் ஆட்சியை அமைய விடக் கூடாது என்ற மன நிலையில் தான் நீங்கள் எல்லாம் இருக்கிறீர்கள். இந்தியா முழுவதும் இந்த நிலை தான் நிலவுகிறது. இந்திய விடுதலைக்கு

முன் மக்கள் மனதில் இருந்த அதே மன நிலை தற்போது இந்தியா சுதந்திரம் அடைந்து 66 ஆண்டுகள் கழித்து, மக்கள் மனங்களில் மீண்டும் உருவாகியுள்ளது.

நடைபெற இருக்கின்ற மக்களவைத் தேர்தல் மக்கள் விரோத ஆட்சியை முடிவுக்கு கொண்டு வரும் தேர்தல் மட்டுமல்ல, மக்களாட்சியை நிலைநாட்டும் தேர்தல். இந்தத் தேர்தலின் மூலம் இந்திய நாட்டிலே நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற குடும்ப ஆட்சிக்கு, ஊழல் ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். அதன் மூலம் மக்களாட்சி மலர வேண்டும். இதனை உங்களால் தான் சாதிக்க முடியும். செய்வீர்களா ? நீங்கள் செய்வீர்களா ? (செய்வோம் என பலத்த கரகோஷம்)

மத்தியிலே மக்களாட்சி மலர்ந்தால் மட்டும் போதாது. அந்த ஆட்சி நமது ஆட்சியாக, தமிழகத்தின் ஆட்சியாக, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அங்கம் வகிக்கும் ஆட்சியாக அமைய வேண்டும். அப்பொழுது தான், தமிழர்களின் உரிமைகள் நிலைநாட்டப்படும். தமிழர்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படும்.

தமிழர்களின் நலன்கள் பாதுகாக்கப்படும். தமிழ்நாட்டு மக்களின் வாழ்வு வளம் பெறும். இதன் அடிப்படையில் நீங்கள் எல்லாம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர்களுக்கு இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். தந்த வெற்றிச் சின்னமாம் இரட்டை இலை சின்னத்தில் வாக்களித்து வெற்றிபெறச் செய்ய வேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

வாக்காளப் பெருமக்களாகிய நீங்கள், இந்த நேரத்தில் நான் சொல்வதை கவனமாகக் கேட்க வேண்டும். அதை மனதில் இறுத்திக்கொள்ள வேண்டும் என்று அன்புடன் வேண்டுகிறேன். உங்கள் வாக்கு என்பது உங்கள் உரிமை. உங்கள் வாக்கு என்பது இந்த நாட்டின் சொத்து. உங்கள் வாக்குதான் நாளை இந்திய நாட்டின் தலைவிதியையே மாற்றி அமைக்கப் போகிறது. அத்தகைய சக்தி படைத்தது உங்கள் வாக்கு. அந்த வாக்கை வீணாக்கிவிடாதீர்கள். இந்த நாடாளுமன்ற மக்களவை பொதுத் தேர்தலில் பல கட்சிகள் களம் இறங்கியுள்ளன. அந்தக் கட்சிகளெல்லாம் உங்களிடம் வந்து வாக்கு கேட்கின்றன. வேறு கட்சிக்கு நீங்கள் வாக்களித்துவிட்டால் அதனால் யாருக்கும் எந்தப் பயனும் இருக்கப் போவதில்லை. நீங்கள் வேறு கட்சிக்கு வாக்களித்தால், அதனால் அந்தக் கட்சிகள் வெற்றிபெறப் போவதில்லை. வாக்குகள் சிதறிவிடும். அவ்வளவு தான். உங்கள் வாக்கு வீணாகிவிடும்.

எனவே, அன்பு கூர்ந்து உங்கள் வாக்கை வீணாக்கிவிடாதீர்கள். மாறாக, நீங்கள் அனைவரும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆதரித்து இரட்டை இலை சின்னத்தில் வாக்களித்து, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர்களை வெற்றிபெறச் செய்தால், மத்தியிலே இந்தியாவை வல்லரசாக்கக் கூடிய வலிமையான ஆட்சி அமையும்.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அங்கம் வகிக்கும் மத்திய ஆட்சி அமைந்தால், இந்த நாட்டு மக்களுக்கும், உங்களுக்கும் எண்ணற்ற நன்மைகள் வந்து குவியும். பாரதம் ஒளிரும், தமிழ் நாடு மிளிரும். எனவே, மறவாமல், தவறாமல் நீங்கள் அனைவரும் இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். கண்ட வெற்றிச் சின்னமாம் இரட்டை இலை சின்னத்தில் வாக்களித்து, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர்கள் அனைவரையும் மகத்தான வெற்றிபெறச் செய்ய வேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

‘அமைதி, வளம், வளர்ச்சி’ என்ற பாதையில் இந்தியாவை வழி நடத்திச் செல்ல அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஒரு நல்வாய்ப்பினை நீங்கள் நல்குவீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

‘‘வளமான வல்லரசு வலிமையான நல்லரசு’’ என்ற நிலையை பாரதம் எய்திட, ‘‘தரணி போற்றும் தன்னிகரில்லா மாநிலம்’’ என்ற பெருமையை தமிழகம் அடைந்திட, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர்களுக்கு ‘இரட்டை இலை’ சின்னத்தில் வாக்களியுங்கள் என்று அன்புடன் மீண்டும் கேட்டுக் கொள்கிறேன்.

மக்கள் தாங்களாகவே தங்கள் சொந்தச் செலவில் வாகனங்களில் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்திற்கு வரும் செலவு வேட்பாளர் கணக்கில் சேர்க்கப்படும் என்று இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளதால், இந்தப் பொதுக் கூட்டத்தில் எனது கட்சியின் வேட்பாளர் கலந்து கொள்ள முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

வாக்காளப் பெருமக்களே! மறவாதீர்! உங்கள் சின்னம் 'இரட்டை இலை'.

வருகின்ற **24.4.2014** அன்று நடைபெற உள்ள நாடாளுமன்ற மக்களவைப் பொதுத் தேர்தலில், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர்களை ஆதரித்து, புரட்சித் தலைவர் MGR தந்த வெற்றிச் சின்னமாம் ''இரட்டை இலை'' சின்னத்தில் வாக்களித்து **40** தொகுதிகளிலும் கழக வேட்பாளர்களை வெற்றி பெறச் செய்ய வேண்டும் என்று அன்புடன் உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்கள் உங்களுடனேயே இருப்பார்கள், உங்களையே சுற்றிச் சுற்றி வருவார்கள். உங்கள் தேவைகள் என்ன என்பதைக் கேட்டறிந்து அவற்றை நிறைவேற்றித் தரப் பாடுபடுவார்கள் என்ற உத்தரவாதத்தை நான் உங்களுக்கு அளிக்கிறேன்.

உங்கள் வாக்கை தமிழகத்தின் நலனுக்காகவும், தமிழர்களின் நலனுக்காகவும் பயன்படுத்துங்கள். இந்தியத் திருநாட்டை காப்பாற்றுங்கள் என்று உங்களையெல்லாம் அன்புடன் கேட்டுக் கொண்டு, ''அச்சம் என்பது மடமையடா, அஞ்சாமை திராவிடர் உடமையடா, ஆறிலும் சாவு நூறிலும் சாவு, தாயகம் காப்பது கடமையடா'' என்ற புரட்சித் தலைவர் MGR அவர்களின் பாடல் வரிகளை நினைவுபடுத்தி அண்ணா நாமம் வாழ்க! புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். நாமம் வாழ்க! என்று கூறி விடை பெறுகிறேன். நன்றி வணக்கம்."

** ** ** **